


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | டிசம்பர் 01, 2022 | புரட்சி 21 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00

# சனாதன சக்திகளை முறியடிக்க இளைஞர்கள் எழுச்சி மாநாடு’

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு கூட்டம் 27.11.22 ஞாயிறு காலை 10:30 மணி அளவில் மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.*

இக்கூட்டத்தில் கழகத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகள், பரப்புரைத் திட்டங்கள், ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு சந்தா திரட்டல், இயக்கத்திற்கு முழு நேரப் பணியாளரை நியமித்தல், இயக்க வளர்ச்சி நிதி திரட்டல் குறித்தான ஆலோசனைகள் நடைபெற்றன.

கழகத் தலைமைக் குழு உறுப்பினர்களின் பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 2023 பிப்ரவரி மாதம் சனாதன எதிர்ப்பு “இளையோர் மாநாடு” சேலத்தில் ஒரு நாள் மாநாடாக மிகச் சிறப்பாக நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது. கருத்தரங்கம், பாட்டரங்கம், கவியரங்கம் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சனாதன எதிர்ப்பு கொள்கை உடைய சிறப்பு அழைப்பாளர்களைக் கொண்ட பொது மாநாடு என மாநாட்டு நிகழ்வுகள் தீர்மானிக்கப்பட்டன.

2) 2023 ஜனவரி 30, காந்தியார் நினைவு நாளை ஒட்டி மதவெறி சக்திகளின் பயங்கரவாத செயல்களை விளக்கி “காந்தி முதல் கௌரிலங்கேஷ்” வரை எனும் தலைப்பில் “மதவெறி எதிர்ப்பு” தெரு முனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்களை நடத்தி மக்கள் மத்தியில் சங்பரிவாரிகளின் வன்முறை செயல்பாடுகளைப் பரப்புரை செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

3) தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் தோறும் மாவட்டக் கழக கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி அவற்றில் தலைவர் உள்ளிட்ட தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு மாவட்டக் கழகங்களைப் புதுப்பித்தல் / மாற்றியமைத்தல், கழக செயல்பாடுகளை விரைவுபடுத்துதல் பற்றி கலந்துரையாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது

4) கழகத்திற்கென முழு நேரப் பணியாளர்களை நியமிப்பது குறித்தும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

5) கழகத்தின் வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கான 2023 ஆம் ஆண்டிற்கான சந்தா சேர்த்தலை தோழர்கள் டிசம்பர் 15ஆம் தேதிக்குள் தலைமையிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், சந்தாக்களின் முடிவு தேதியும் 31.12.2023 ஆகத் தான் இருக்கும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

6) தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் வரும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் குழந்தைகளுக்கான பழகு மகிழ்வு முகாம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மதியம் 2 மணி அளவில் தலைமைக் குழுக்கூட்டம் நிறைவுற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம. இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், சமூக ஊடக பொறுப்பாளர் பரிமளராஜன், சூலூர் பன்னீர்செல்வம், சென்னை உமாபதி, மேட்டூர் சக்தி, விழுப்புரம் அய்யனார், காவலாண்டியூர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புலியூரில் மாவீரர் நாள் நினைவேந்தல் : கொளத்தூரில் வீரவணக்கப் பொதுக் கூட்டம்






சேலம் மாவட்ட ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் மாவீரர் நாள் நிகழ்ச்சி சேலம் மாவட்டம், கொளத்தூர் புலியூர் பிரிவில் தளபதி பொன்னம்மான் நினைவு நிழற்கூடம் முன்பு 27.11.2022 அன்று மாலை 6-00 மணியளவில் நடை பெற்றது. மாலை 7-00 மணிக்கு கொளத்தூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற வீரவணக்கப் பொதுக் கூட்டத்துக்குத் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர்கொளத்தூர் மணி தலைமை தாங்கினார்.

திவிக சேலம் மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், கழகத் தோழர் ஓ. சுதா, விசிக வடக்கு மாவட்டச் செயலாளர் வசந்தன், விசிக ஒன்றிய செயலாளர் சேட்டு குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புலியூர் பிரிவில் உள்ள பொன்னம்மான் நினைவு நிழற் கூடத்தில் பொதுமக்கள் உணர்வாளர்கள் ஆகியோர் வீர வணக்கம் செலுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

ஈழ ஆதரவாளர்களால் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படும் வீரவணக்க பாடல் சரியாக மாலை 06.05 மணிக்கு ஒலிக்கப்பட்டது. உணர்வு மிக்க அந்த வீரவணக்கப் பாடலுக்கு கூடியிருந்த ஈழ விடுதலை ஆதரவாளர்கள் அனைவரும் அமைதி காத்து ஈழ விடுதலைப் போரில் வீரமரணம் அடைந்த விடுதலை புலிகளுக்கு அகவணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து பெண்கள், குழந்தைகள் என பொது மக்களும், ஈழ விடுதலை ஆதரவாளர்களும், தோழர்களும் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து விடுதலைப் போராளிகளின் ஈகத்தை நினைவு கூறும் வகையில் மெழுகுவர்த்தியை ஏந்தியும், பொன்னம்மான் நினைவு நிழல் கூடத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுச் சின்னத்திற்கு வீர வணக்கமும் செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு ஆகியோர் வீரவணக்கம் செலுத்தினார்கள்.

வீரவணக்க நிகழ்ச்சியை தொடர்ந்து கொளத்தூர் பேருந்து நிலையம் முன்பு வீரவணக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த அப்பொதுக் கூட்டத்தின் முதல் நிகழ்வாக ஈழ விடுதலைக்கு உழைத்திட்ட, தொல் திருமாவளவன், கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், வன்னி அரசு ஆகியோர் குறித்த குறும்படம் காணொளி வடிவில் பெரிய திரைகளில் மக்கள் முன்பு திரையிடப்பட்டது.

2008 க்குப் பின் கொளத்தூர் புலியூர் பிரிவு தளபதி பொன்னம்மாள் நினைவு நிழல் கூடத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளின் தொகுப்பும் குறும்படமாக திரையிடப்பட்டது.

பொதுக் கூட்டத்தின் தொடக்கத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய புதிய பதிப்பான “பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்” எனும் நூல் விடுதலை சிறுத்தைகளின் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் அவர்களால் வெளியிடப்பட்டது. இந்நூல் நன்செய் பதிப்பகத்தில் மூலம் மக்கள் பதிப்பாக குறைந்த விலைக்கு மறு வெளியீடாக வெளியிடப்பட்டது. அந்நூலின் விற்பனைத் தொகை முழுவதும் ’புரட்சிப் பெரியார் முழக்க’ வளர்ச்சி நிதியாய் வழங்கப்படும் என நன்செய் பதிப்பகம் கவிஞர் தம்பி, திருச்சி அரசெழிலன் ஆகியோர் அறிவித்தனர்.

அடுத்து உடுமலை சாந்தி இயல் எழுதிய ‘உயிர்க் காற்று’ என்ற நூலினையும் விசிக தலைவர் திருமாவளவன் வெளியிட விசிக துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கரூர் மலைக் கொழுந்தன் எழுதிய ‘போலிகளோடு ஒரு போர்’ எனும் நூலையும் தொல் திருமாவளவன் வெளியிட்டார்.

அடுத்து விடுதலைச் சிறுத்தைகளின் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகளின் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் ஆகியோர் மாவீரர் நாள் உரை நிகழ்த்தினார்கள். நிறைவாக திவிக நகரத் தலைவர் இராமமூர்த்தி நன்றி கூறினார்.

# சூதாட்டத் தடையை சூதாடி வீழ்த்திய பலே ஆளுநர்!

***ஆ**ன்லைன் சூதாட்டங்களுக்குத் தடை போடும் மசோதாவுக்கு தமிழக ஆளுநர் ஒப்புதல் தராததோடு, தமிழ்நாடு அரசுக்கு சில சட்ட விளக்கங்களைக் கேட்டு கடிதம் எழுதியுள்ளார். 24 மணி நேரத்தில் அதற்கு சட்ட ரீதியான பதிலை தமிழ்நாடு அரசு அனுப்பி உள்ளது. அந்த சட்டப் பிரச்சனைகள் எம்மைப் போன்ற பாமர மக்களுக்குப் புரியாது என்ற கவலையோடு ஆளுநர் கேட்ட கேள்விகளுக்கும், கேட்காத கேள்விகளுக்கும் 'கோடங்குடி மாரிமுத்து' இந்த பதில்களை பணிவோடு சமர்ப்பிக்கிறார்.*

**ஆளுநர் கேட்காத கேள்வி :** *சில ஆண்டு காலமாவது கிடப்பில் போடாமல் 24 மணி நேரத்தில் எனக்கு பதிலை அனுப்பி என்னை அவமானப்படுத்துகிறீர்களா ?*

**கோடங்குடி மாரிமுத்து பதில் :** அப்படியெல்லாம் இல்லை யுவர் எக்சலென்சி! எங்கே நீங்க மகாபாரதத்தில் சூதாட்டம் நடந்திருக்கிறது. அதுவே நமது பாரத கலாச்சாரம் என்று அடுத்தக் கூட்டத்தில் பேசி விடப் போவீர்களோ என்று பக் பக் என்று பதறியது; உடனே பதிலை அனுப்பி விட்டோம்.

**ஆ. கேள்வி :** *ஏற்கனவே உயர் நீதிமன்றம் இந்தத் தடை அரசியல் அமைப்புக்கு எதிரானது என்று கூறியிருக்கும் பொழுது சட்ட மீறல் செய்து சட்டம் இயற்றலாமா ?*

**கோ.மா பதில் :** என்னது அரசியல் சட்டமா? அப்படினு ஒன்னு இந்த நாட்டில் இருப்பது உங்களுக்குத் தெரியுமா ? ரிஷிகளும் முனிவர்களும் ஏற்றுக்கொள்ளாத இந்தக் குப்பைகள் எல்லாம் நமக்கு ஏன் ஜி ?

**ஆ. கேள்வி :** *அதிர்ஷ்டத்திற்கான விளையாட்டு, திறமைக்கான விளையாட்டு என்று இரண்டுக்குமான வித்தியாசம் உங்கள் சட்டத்தில் காட்டப்பட வில்லையே ?*

**கோ.மா பதில் :** அதிர்ஷ்டத்திற்கான விளையாட்டில் வெற்றி பெறவும் திறமை வேண்டும் என்பது தங்களுக்குத் தெரியாதா ஜி? இப்ப பாருங்க, நீங்க ஆளுநராக வந்தது உங்களுக்கு அடிச்ச அதிர்ஷ்டம், இந்த அதிர்ஷ்டத்தைப் பயன்படுத்தி நீங்கள் சூதாட்டத்தையும் நியாயப்படுத்திப் பேசுறீங்க பாருங்க அதுக்குப் பேரு திறமை.

**ஆ.கேள்வி :** *ரம்மி சூதாட்டத்தில் நேரடியாக ஆடி டிக் அடிப்பது திறமை ஆன்லைனில் விளையாடுவது சூது, இரண்டையும் சேர்த்து தடை செய்வது என்ன நியாயம் ?*

**கோ.மா பதில் :** அடேங்கப்பா ! சூதாட்ட போதையில்கூட திறமை இருப்பதை எவ்வளவு சிறப்பா நியாயப்படுத்துறீங்க ! தர்மத்தைக் காக்க கொலை செய்யலாம் என்ற கிருஷ்ண பகவான் உபதேசத்த கரைச்சு லிட்டர் லிட்டரா குடிச்சவங்க நீங்க. உங்களுக்கு தான் இப்படியெல்லாம் மூளை வேலை செய்யும்.

**ஆ. கேள்வி :** *எந்த மசோதாவுக்கும் நான் ஒப்புதல் தர மாட்டேன் என்று உங்களுக்கு ஏற்கனவே புரிய வைச்சிட்டேன். பிறகு ஏன் புதிய புதிய மசோதாக்களை கொண்டுவந்து தொலைக்கிறீங்க ?*

**கோ.மா பதில் :** தெரியும் தான். ஆனால் இதையே அரசு ஆணையாக போட்டதுமே அதற்கு ஒப்புதல் தந்தீங்களே அதனால் தான்....

**ஆ. கேள்வி :** *அதனால கேவலம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு ஆட்சி மசோதாவை நிறைவேற்றி விடுவதா? அப்போ ஒப்புதல் தந்தது உங்க அரசுக்கு அடித்த அதிர்ஷ்டம், இப்போது திருப்பி அனுப்புவது என்னுடைய திறமை. நல்லா புரிஞ்சிக்கோங்க. சூதாட்டத்தை முழுமையாக தடை செய்ய முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவில் தான் தடை செய்ய முடியும் என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது உங்கள் காதுகளில் விழவில்லையா ?*

**கோ.மா பதில்:** நாங்க மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவங்க, மக்களுக்கு ஏதாவது நன்மை செய்யலாம்னு நினைக்கிறோம். நீங்களெல்லாம் பாரதத்தை காப்பாத்த அவதாரமாக வந்து அதிகாரம் பன்றவங்க.

ஆனா ஒன்ன மட்டும் புரிஞ்சிக்கங்க எஜமான்.

நீங்களும் சூதாட்ட 'கில்லாடி' மசோதா காலாவதியாகிற கடைசி நாளைப் பார்த்து கேள்வி கேட்டு அரசு மசோதாவை 'ட்ரம்ப் கார்டா' வைச்சு வெட்டிறிங்க பார்த்தீங்களா? பாண்டவர்கள் பெண்டாட்டியை பணயம் வைத்தது மாதிரி; அது தான் 'ஹைலைட்'.

**– கோடங்குடி மாரிமுத்து**

# டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் தமிழர்களுக்கு 80% வேலை உறுதி : தங்கம் தென்னரசு விளக்கம்

கிருஷ்ணகிரி டாடா எலெக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலையில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாக அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அமைந்துள்ள டாடா எலெக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் அதிக எண்ணிக்கையில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வேலை அளித்த குற்றச்சாட்டு தொடர்பாக தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "டாடா எலெக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், மின்னணு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தனது தொழிற் சாலையை கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அமைந்துள்ள GMR தொழிற்பூங்காவில், சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்து வருகிறது.

4684 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுவரும் இத்தொழிற் சாலையின் மூலம் ஏறத்தாழ 18000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருவதாக பத்திரிக்கை செய்திகளும் புகார்களும் அரசிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

இந்நிறுவனம் தற்போது வரை தமிழ்நாட்டைச் சார்ந்த ஏறத்தாழ 5500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளதாக தெரிவித்துள்ளது. வணிக ரீதியிலான உற்பத்தியினைத் தொடங்கும்போது பணியாளர் தேவையில் ஏறத்தாழ 80 விழுக்காடு பணியிடங்களுக்கு தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை நியமிக்க டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் பொறுப்புறுதி அளித்துள்ளது.

பணி நியமனத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (மற்றும்) வர்த்தகத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ஆகியோர் இந்நிறுவனத்துடன் கலந்தாலோசனை மேற்கொண்டனர்.

சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களில் 7559 நபர்கள் கலந்து கொண்டனர். அவர்களில், 1993 நபர்களுக்கு தற்போது வேலைவாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது. குறிப்பாக இந்நிறுவனம் அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 3 நாட்கள் நடந்த வேலைவாய்ப்பு முகாம்களில் 895 நபர்கள் கலந்து கொண்டதில், 355 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டைச் சார்ந்த நபர்களுக்கு நிறுவனத்தால் வேலைவாய்ப்பு வழங்குவது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றார் தங்கம் தென்னரசு.

# அறிவியலைப் பரப்பும் 'வானவில் மன்றம்' – அரசின் வரவேற்கத் தக்க முடிவு

இந்திய அரசியல் சட்டத்தில், அடிப்படைக் கடமையாக 51 AH பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவு மக்களிடம் அறிவியல் மனப்பான்மை வளர்ப்பதை ஒரு குடிமகனின் அடிப்படைக் கடமை என்று கூறுகிறது. ஆனால் அந்தப் பிரிவு இதுவரை எவராலும், எந்த ஒரு அரசாலும் அமுல்படுத்தப்படவே இல்லை. முதன்முதலாக அந்த வரலாற்றுச் சிறப்பை தமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் பயிலும் 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு "வானவில் மன்றம்" என்ற அமைப்பு துவங்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் இதை துவங்கி வைத்திருக்கிறார். மாணவர்களிடம் அறிவியல், கணித ஆர்வத்தை தூண்டுவது இந்த வானவில் மன்றத்தின் நோக்கமாகும். இளம் பருவத்திலேயே மாணவச் செல்வங்கள் அறிவியல் மனப்பான்மையுடன் வளர்க்க வேண்டும் என்ற மிகச் சிறந்த உன்னத நோக்கத்தோடு இந்தப் பிரிவு தொடங்கப்பட்டு இருக்கிறது. இது இந்திய ஒன்றியத்திற்கே வழி காட்டக்கூடிய ஒரு திட்டம் என்று தான் கூற வேண்டும்.

ஒன்றியத்தில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு, 51AH என்று கூறக் கூடிய அறிவியல் மனப்பான்மையை குழிதோண்டி புதைக்கிற பழைமைவாதக் கருத்துக்களை மாணவர்களிடையே திணித்து வருகிறது. பகவத் கீதைகள், சோதிடம், வேத, புராண சாஸ்திரங்கள் இவைகளெல்லாம் பாடங்களாக்கப் பட்டு மாணவர்களுடைய பிஞ்சு நெஞ்சில் நஞ்சு விதைக்கப்பட்டு வருகிறது. மாற்றாக அறிவியல் மனப்பான்மை வளர்க்க வேண்டும் என்று குரல் கொடுக்கிற ஒரே அரசு திராவிட மாடல் அரசு தான். இதில் ஒன்றை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறினால், அந்த அறிவியல் மனப்பான்மைக்குத் தடையாக இருக்கிற மூட நம்பிக்கைகளை களைந்து விட்டுத்தான் நாம் அறிவியல் நம்பிக்கைகளை உருவாக்க முடியும். ஆனால், மூட நம்பிக்கைகளை அம்பலப்படுத்தாமல் அதில் அடங்கியிருக்கிற அறிவியலுக்கு எதிரான கருத்துக்களை வெளிக்கொணராமல், அறிவியல் கருத்துக்களை மட்டும் பேசுவது என்பது, அறிவியலும் ஒரு பக்கம் வளரந்து கொண்டிருக்கும், மூட நம்பிக்கையும் வளர்ந்து கொண்டிருக்கும் என்ற நிலையைத் தான் உருவாக்கும்.

இந்த வானவில் மன்றங்கள் இளைஞர்கள், குழந்தைகள், சிறுவர்கள் மத்தியில் படிந்து போய் கிடக்கின்ற மூட நம்பிக்கைளில் புரையோடிக் கிடக்கின்ற பழமைவாதக் கருத்துக்களை அம்பலப்படுத்துகின்ற செயலையும் செய்தாக வேண்டியது கட்டாயம். இது அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதற்கான அடித்தளம். இதையும் இந்த வானவில் மன்றம் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையோடு, தமிழ்நாடு அரசின் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க முயற்சியை உண்மையிலேயே பாராட்டி வரவேற்கிறோம்.

# கழகம் முன்னெடுத்த சட்ட எரிப்பு நாள் நிகழ்வுகள்

# சென்னையில் கழகத் தலைவர் தலைமையில் உறுதி ஏற்பு

*திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பல்வேறு பகுதிகளில் நவம்பர் 26 அன்று நடைபெற்ற சட்ட எரிப்பு நாள் பொதுக் கூட்டங்கள் வீர வணக்க நிகழ்வுகளின் தொகுப்பு.*




**சென்னை :** திராவிடர் இயக்கத்தின் மிக முக்கிய போராட்டமான ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை தோழர்கள் கொளுத்தி இந்திய ஒன்றியத்தை திரும்பி பார்க்க வைத்தப் போராட்டம் 'சட்ட எரிப்புப் போராட்டம்' ஆகும்.

இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில், பதாகைகள் சட்ட எரிப்பு போராளிகளை நினைவுகூரும் வகையிலும், வீரவணக்கம் செலுத்தும் வகையிலும் அமைக்கப்பட் டிருந்தது. 26.11.2022 அன்று காலை 8 மணியளவில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பின்பு சட்ட எரிப்பு நாள் குறித்து உரையாற்றினார். முன்னதாக, தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தேன்மொழி 'ஜாதி ஒழிப்பு உறுதிமொழி' வாசிக்க கழகத் தோழர்கள் உறுதியெடுத்தனர்.

**ஜலகண்டாபுரம் :** 26.11.2022 மாலை 6.00 மணியளவில் ஜலகண்டாபுரம் பேருந்து நிறுத்தம் எதிரில் திராவிடர் விடுதலைக்கழகம் நடத்திய நவம்பர் 26 சட்ட எரிப்புப் போராளிகளுக்கு வீரவணக்க பொதுக் கூட்டத்தில் மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவின் ஜாதி ஒழிப்புப் பாடல்களோடு துவங்கியது. இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் தொடங்கியது.

நங்கவள்ளி நகர செயலாளர் சு.பிரபாகரன் வரவேற்புரை நிகழ்த்த நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் பொ. கிருஷ்ணன் தலைமை வகித்தார். தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், தலைமைக்குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த ம. கிருஷ்ணன், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமைக் கழக பேச்சாளர் கோனூர் வைரமணி, மனிதநேய மக்கள் கட்சியினுடைய மாவட்டத் தலைவர் முஹம்மது ரயிஷ் ஆகியோர் வீரவணக்க உரை நிகழ்த்தினர்.

நிறைவாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை நிகழ்தினார். அவர் தமது உரையில், "பெரியாருக்கு அரசியல் நிர்ணய சபையை நிர்ணயிக்கும் போதே எதிர்ப்பு இருந்தது என்றும், நோக்க தீர்மானத்தை அன்று முன் மொழிந்தவர் அன்றைய பிரதமர் நேரு என்றும், ஒன்றிய அரசு அனைத்து அதிகாரங்களையும் குவித்து வைத்துள்ளது என்றும், 2014க்கு பிறகு இந்தியாவில் மதச்சார்பின்மை கேள்விக் குறியாகி விட்டது என்றும், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் ஜாதி என்பது தேசத்திற்கு எதிரானது என்று கூறியதையும் தமது உரையில் சுட்டி காட்டினார்.

மேலும் நவம்பர் 26 - 1957 அன்று நடைபெற்ற ஜாதியை பாதுகாக்கும் அரசியல் பிரிவுகளை தீயிட்டு கொழுத்தி சிறை சென்ற, சிறைக்கு உள்ளேயும், சிறையில் இருந்து வெளியேயும் வந்து தன் இன்னுயிரை நீத்த தோழர்களைப் பற்றியும் விரிவாக தமது உரையில் கூறினார். கூட்டம் இரவு 10 மணிக்கு நங்கவள்ளி அ.செ.சந்திரசேகரன் நன்றியுரையுடன் முடிவடைந்தது. தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுக் கூட்டத்தை விளக்கி நங்கவள்ளி, ஜலகண்டாபுரம் ஆகிய பகுதிகளில் சுவரொட்டிகளை தோழர்கள் ஒட்டியிருந்தனர். பொது கூட்டத்தின் சிறப்புகள்:

1) கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களின் 75 வது பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில் சேலம் மாவட்டத்தின் சார்பில் 100 ஐந்தாண்டு புரட்சி பெரியார் முழக்க சந்தா தொகையை வழங்குவது என தீர்மானிக்கப்பட் டிருந்தது. அதன் முதல் தவணையாக 50 புரட்சி பெரியார் முழக்கத்திற்கான 5 ஆண்டு சந்தா தொகை ரூ.75000/- கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

2) எடப்பாடி பகுதியை சேர்ந்த தோழர் செல்வகுமார் மற்றும் சுவாதிபிரியா ஆகியோரது பெண் குழந்தைக்கு கழக தலைவர் அவர்கள் கனல்விழி என்ற பெயரை சூட்டினார்.

**பேராவூரணி :** பேராவூரணியில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சாதியை பாதுகாக்கும் சட்டங்களை எரித்து சிறை சென்று உயிர் ஈகம் செய்த சாதி ஒழிப்பு போராளிகளுக்கு நவம்பர் 26 அன்று மாலை 6 மணியளவில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சித திருவேங்கடம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பாளர் ராஜமாணிக்கம், மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பாளர் வேலுச்சாமி, அறநெறி மக்கள் கட்சி பொறுப்பாளர் ஆயர் த ஜேம்ஸ், தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொறுப்பாளர் ஒட்டங்காடு மூர்த்தி, தமிழ் வழி கல்வி இயக்க பொறுப்பாளர் மெய்ச் சுடர் நா.வெங்கடேசன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

"பழக்க வழக்கம் என்ற பெயரில் சாதியை பாதுகாக்கும் இந்திய அரசியல் அமைப்பின் சட்ட பிரிவுகளை நீக்க வேண்டும் என வலியுறுத்தி சாதிய பாகு பாட்டை வளர்த்தெடுக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவுகளை எரித்து சிறை சென்று உயிர் தியாகம் செய்த வீர தியாகிகளை நெஞ்சில் நிறுத்த வேண்டும். சமூக நீதிக்கு முரணாக தொடர்ந்து செயல்பட்டு வரும் ஒன்றிய அரசு உடனடியாக சாதியை வளர்த்தெடுக்கும் சட்டப் பிரிவுகளை நீக்க வேண்டும். சமூக நீதிக்கு குழி பறிக்கும் உயர்சாதி ஏழைகளுக்கான 10% இட ஒதுக்கீட்டை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இந்தியாவின் பெரும்பான்மை ஓபிசி மக்களின் உரிமைகளை பறிக்கும் உயர் சாதி ஏழைகளுக்கான இட ஒதுக்கீட்டை நீக்க வேண்டும். அதிக மக்கள் தொகை கொண்ட ஓபிசி பிரிவுக்கு குறைந்த சதவிகிதத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிற நிலையில் மிகக் குறைவான மக்கள் தொகை கொண்ட எட்டு லட்சம் வரை வருமானம் ஈட்டும் உயர் சாதி ஏழைகளுக்கு(?) அதிக சதவிகிதத்தில் இட ஒதுக்கீடு வழங்குவது எப்படி நியாயமாகும்? சமூக நீதிக்காக தொடர்ந்து மக்கள் குரல் கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஓபிசி பிரிவு மக்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தில் கையொப்பமிட்ட மேனாள் பிற்படுத்தப்பட் டோர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கோவேந்தன் அவர்களின் மண்ணிலிருந்து மீண்டும் சமூக நீதிக்கான குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்" என்று கூட்டத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டது.

நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகம், திராவிடர் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழக மக்கள் புரட்சி கழகம், அறநெறி மக்கள் கட்சி, தமிழ் வழிக் கல்வி இயக்கம் போன்ற அமைப்பு களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நகரின் மையப் பகுதியில் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கருத்தாளர்களின் உரையினை கடைவீதியில் பெரும்பாலானோர் நின்று கேட்டுச் சென்றனர்.

தொடக்கத்தில் பகுத்தறிவு பாடகர் பள்ளத்தூர் நாவலரசன் அவர்களின் பகுத்தறிவு பாடல் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் இரண்டு நாட்களுக்கு முன் மறைந்த பகுத்தறிவாளர் கழக பொறுப்பாளரும் சிந்தனையாளருமான ஆசிரியர் அய்யா சி. வேலு அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

முன்னதாக திராவிடர் விடுதலைக் கழக பொறுப்பாளர் மருத உதயகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். நிறைவாக திராவிடர் விடுதலைக் கழக பொறுப்பாளர் அ.கோவிந்தன் நன்றி கூறினார்.

**மதுரை :** மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 3ஆவது ஆண்டாக, ஜாதியைப் பாதுகாக்கும் சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கம் யானைக்கல் பிரசிடன்சி அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி தலைமை தாங்கினார். மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி வரவேற்பு கூறினார்.

பெரியாரும் தமிழ் நாடு விடுதலையும் என்கிற தலைப்பில் மாவட்ட கழகக் காப்பாளர் தளபதி உரையாற்றினார். ஜாதியைப் பாதுகாக்கும் சட்ட எரிப்பு நாள் போராட்ட வரலாறு குறித்து மார்க்சியப் பெரியாரிய பொது வுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் சிறப்புரை யாற்றினார்.

பெரியார் எதற்காக அரசியல் சட்டப் பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தை அறிவித்தார். அந்தப் போராட் டத்தில் பெரியார் தொண்டர்கள் செய்த அளப்பரிய தியாகங்கள் பற்றியும் பெரியாரையும் திராவிடர் இயக்கத்தையும் கொசைப்படுத்த முயற்சிக்கும் போலி தமிழ் தேசியவாதிகளையும் அம்பலப்படுத்தி பேசினார்.

முன்னதாக பேராசிரியர் க.நெடுஞ்செழியன் படத்தை தபெதிக மாநில பொதுக்குழு உறுப்பினர் தமிழ்ப் பித்தன் திறந்து வைத்து நினைவு உரையாற்றினார். மொழிப் போர் தியாகி. ப.ஜெயப்பிரகாசம் படத்தை வாலாசா வல்லவன் திறந்து வைத்தார்.

நமக்கான அடையாளம் திராவிட மாடல் பரப்புரை யின் போது அறிமுகமான பானு ரேகா மாவட்ட பொறுப்பாளர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து கொண்டார். புலிப்பட்டி பொறுப்பாளர் கருப்பையா நன்றியுரையாற்றினார்.

தமிழ் தமிழர் இயக்கம் பரிதி, விடுதலை சிறுத்தைகள், தமிழ்ப் புலிகள், தபெதிக, மே 17. இயக்கத் தோழர்களும் கழக மாநகர் தலைவர் திலீபன் செந்தில், காளி, மருது பாண்டி உள்ளிட்ட கழகத் தோழர்களும் , கழக ஆதரவு வழக்கறிஞர்களும் மேலும் கருத்தரங்க சுவரொட்டிகள் மூலமாக பல புதிய இளைஞர்களும் பங்கேற்றனர்.

**திருப்பூர் :** திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 1957 ஆண்டு நடந்த ஜாதியை காப்பாற்றும் அரசியல் சட்டப் பிரிவுகள் எரிப்பு போராட்ட நாள் நினைவேந்தல் நிகழ்வு மற்றும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு ஆகியவை, நவம்பர் 26 காலை 10:30 மணி அளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு நடந்தது.

நிகழ்ச்சிக்கு திவிக பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

1957இல் நடந்த இந்த சட்ட பிரிவுகள் எரிப்பு போராட்டம் குறித்து தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சந்தோஷ், விடுதலைச் சிறுத்தை கட்சியின் து.பொ. செயலாளர் துரை வளவன், ஆதிதமிழர் பேரவையின் மத்திய மாவட்ட செயலாளர் தீர. தமிழ்மாறன் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, திவிக இணைய தளப் பொறுப்பாளர் பரிமள ராஜன் ஆகியோர் உரை யாற்றினர். மாவட்ட அமைப்பாளர் சங்கீதா கொள்கை முழக்கங்களை எழுப்பினார். திவிகவைச் சேர்ந்த வீரலட்சுமி ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்பை செய்வித்தார்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் தமிழ்வேந்தன் மற்றும் கழக மாநகர மாவட்ட பொறுப்பாளர்கள் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் திவிகவின் நிர்வாகிகள் தோழர்கள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்கள் ஆதித் தமிழர் பேரவையின் தோழர்கள் என திரளானோர் கலந்து கொண்டார்கள்.

**கோவை :** நவம்பர் 26,1957 ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்ட பிரிவுகளை கொளுத்தி வீரமரணம் அடைந்த ஜாதி ஒழிப்புப் போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு கோவை மாநகர அமைப்பாளர் கிருட்டிணன் தலைமையில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பு நடைபெற்றது. சூலூர் தமிழ்செல்வி உறுதிமொழி வாசிக்க, கழகத் தோழர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், மாவட்டத் தலைவர் பா. இராமசந்திரன், வெங்கட், புரட்சித் தமிழன், குட்டையூர் கந்தசாமி மற்றும் நிர்மல் குமார் ஆகியோர் சட்ட எரிப்புப் போராட்டம் குறித்து உரையாற்றினார்கள்.

நன்செய் பதிப்பகம் தொகுத்த 'சட்ட எரிப்புப் போராட்டம்' நூலை மாவட்ட கழகத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் வெளியிட ஜெகதீசன் அதைப் பெற்றுக் கொண்டார். இறுதியாக சிவராசு நன்றி கூறினார். கலந்துகொண்ட தோழர்கள் அனைவருக்கும் பெரியார் தொண்டர் ஜெகதீசன் தேநீர் வழங்கி சிறப்பித்தார்.

வீரவணக்க நிகழ்வு முடிந்த பிறகு, காந்திபுரம் பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு சட்ட எரிப்பு போராளிகளின் தியாக வரலாற்றை விளக்கும் துண்டறிக்கைகள் வழங்கினர்.

கலந்து கொண்ட தோழர்கள்: மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், சூலூர் பன்னீர்செல்வம், சூலூர் தமிழ் செல்வி, நிர்மல் குமார், கிருஷ்ணன், வெங்கட், மாதவன், புரட்சித் தமிழன், சிவராசு, இயல், இராஜாமணி, பொன்மணி, துளசி, சைனி, ஜெகதீஷ், குட்டையூர் கந்தசாமி, அமிலா, சதீஷ் (போத்தனூர்), காந்தி, முத்தமிழ், நிலா, தமிழினி, சுருதி, தமிழேந்தி.

**கோபி :** ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் நவம்பர் 26 - 1957இல் தந்தை பெரியாரின் தலைமையில் சாதியை பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்ட பிரிவை எரித்து சிறை சென்று, சிறையிலேயே உயிர் நீத்த சாதி ஒழிப்பு போராளிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு கோபி பெரியார் சிலை முன்பு, 26.11.2022 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வயலூர் முருகன் கோவிலில் பார்ப்பனர்கள் அடாவடி; கழகம் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




**வ**யலூர் முருகன் கோவிலில், அனைத்து ஜாதி அர்ச்சகர் பணி நியமன ஆணை பெற்ற அர்ச்சகர்களை கருவரைக்குள் நுழைய விடாமல் தடுக்கும் பார்ப்பன அர்ச்சகர்களைக் கண்டித்தும், மதுரை உயர்நீதிமன்றத்தில் அனைத்து ஜாதி அர்ச்சகருக்கு எதிராக பார்ப்பன அர்ச்சகரின் மகன் தொடர்ந்த வழக்கில் நியாயமான தீர்ப்பை கோரியும், சிம்சன் பெரியார் சிலை அருகில், 23.11.2022 மாலை 3:30 மணியளவில் மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் செய்தியாளர்களுக்குப் பேடியளித்த மாவட்ட செயலாளர் இரா.உமாபதி கூறுகையில், "பெரியாரின் நெஞ்சில் தந்தை முள்ளான, அனைத்து ஜாதி அர்ச்சகர் சட்டத்திற்கு பணி நியமனத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கியது 2000 ஆண்டு கருவரைத் தீண்டாமையை உடைத்தது. இருந்தாலும், சில இடங்களில் பார்ப்பன அர்ச்சகர்கள் அனைத்து ஜாதி அர்ச்சர்களை பணி செய்ய விடாமல் தடுத்து வருகின்றனர். மேலும், பார்ப்பன அர்ச்சகரின் மகன் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். வழக்கே நியாமானது இல்லை. நாளை வரும் தீர்ப்பு அனைத்து ஜாதி அர்ச்சகர்களுக்கு எதிராக இருக்கும் பட்சத்தில் தமிழ்நாடு தழுவிய போராட்டம் தொடரும். தொடர்ந்து பார்ப்பன ஆர்ச்சகர்களின் இந்த அடாவடிப் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார். மேலும் ஆர்ப்பாட்டத்தில், தமிழ்த்தேச மக்கள் முன்னணி செந்தில் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

***மதுரை :*** வயலூர் முருகன் கோவிலில் நியமிக்கப்பட்ட அர்ச்சகத் தமிழர்களை வெளியேற்ற சதி செய்யும் ஆர்.எஸ்.எஸ். பாஜக பார்ப்பன கும்பலைக் கண்டித்து மதுரையில் திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தோழமை அமைப்புகள் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் 23.11.2022 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு, மதுரை மாவட்ட செயலாளர் மணிஅமுதன் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில், தமிழ்தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த.பாண்டியன், தங்க பாண்டி, ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ஆதவன், மாநில பொறுப்பாளர் தலித் ராஜா, மே 17 இயக்கம் சரவணன், மக்கள் சட்ட உரிமைப் பாதுகாப்பு இயக்கம், அண்ணாத் துரை, விடுதலை சிறுத்தைகள் கல்மேடு பொறுப்பாளர் மணிவேல், தபெதிக மாநில பொதுக்குழு உறுப்பினர் தமிழ் பித்தன், தமிழ்புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் பவுலி, அருந்ததிய ஜனநாயக இயக்கம் மற்றும் பல்வேறு தோழமை அமைப்புத் தோழர்கள் பங்கேற்றனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழகத் தோழர் ராம், அய்யா சிலைக்கு மாலை அணிவித்த பின் வீரவணக்க முழக்கத்துடன் சாதி ஒழிப்பு உறுதிமொழி தோழர்கள் அனைவரும் எடுத்துக் கொண்டனர். நிகழ்வில் கழகத்தின் வெளீயிட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்ட செயலாளர் எலத்தூர் செல்வக்குமார் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம்** : சேலம் மாநகரத்தின் சார்பாக 26.11.2022 அன்று காலை 7 மணிக்கு தாதகாப்பட்டி உழவர் சந்தையில் அமைந்திருக்கும் பெரியார் கருத்து பலகை முன்பு தோழர்கள் ஒன்று கூடி ஜாதி மறுப்பு உறுதிமொழி ஏற்று ஜாதி ஒழிப்பு சட்ட எரிப்பு நாள் துண்டறிக்கை விநியோகம் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து தாதகாப்பட்டி பேருந்து நிறுத்தம், பிரபாத் பேருந்து நிறுத்தம் மற்றும் பழைய பேருந்து நிலையம், பெரியார் சிலை ஆகிய பகுதிகளில் கல்லூரி, பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்களிடையே துண்டறிக்கை கொடுக்கப்பட்டது. சிறப்பாக அமையப் பெற்ற இந்த நிகழ்வில் தோழர்கள் பொதுமக்கள் இடையே சிறப்பாக உரையாடினர். 2000 துண்டறிக்கைகள் மக்களைச் சென்றடைந்தது.

***பொள்ளாச்சி :*** பொள்ளாச்சி நகர கழகம் சார்பில் ஆனைமலை சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு, கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில், நவம்பர் 26 அன்று காலை 9 மணியளவில் மாலை அணிவிக்கப்பட்டது. ஆனைமலை வினோதினி சட்ட எரிப்பு நாள் உறுதிமொழி வாசிக்க தோழர்கள் உறுதிமொழி எடுத்தனர். அடுத்ததாக ஆனமலை முக்கோணத்தில், அரிதாசு தலைமையில் படம் திறந்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் ஆனைமலை வினோதினி, மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி, அரிதாசு, ஆனந்த், நடராஜ், கணேஷ், சபரிகிரி, விவேக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெறுப்புணர்வை தூண்டும் காஷ்மீர் பைல்ஸ்– சர்வதேச விழாவில் கண்டனம்

**வி**வேக் அக்னிகோத்ரி இயக்கிய காஷ்மீர் பைல்ஸ் திரைப்படம் மார்ச் 11ஆம் தேதி வெளியானது. இசுலாமிய மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வை உமிழ்ந்த இத்திரைப்படத்தை இந்துத்துவா அமைப்புகள் தலையில் தூக்கி வைத்து கொண்டாடின. குஜராத், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் கேளிக்கை வரியில் இருந்தும் இத்திரைப்படத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டது. இந்த படத்திற்கு ஆஸ்கார் விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்ததாகவும் இயக்குநர் விவேக் அக்னிகோத்ரி கூறியிருந்தார். ஆனால் இது வெறுப்புணர்வை பரப்பும் படம் என்று சர்வதேச திரைப்பட விழாவில் அதன் தேர்வுக்குழு தலைவர் நடாவ் லேபிட் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

53வது சர்வதேச கோவா திரைப்பட விழா நவம்பர் 20ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை நடைபெற்றது. 79 நாடுகளை சேர்ந்த 280-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் இவ்விழாவில் திரையிடப்பட்டன. இதில் இந்திய பனோரமாவில் 25 திரைப்படங்கள், 20 பிற படங்கள் திரையிடப்பட்டன. அதில் காஷ்மீர் பைல்ஸ் திரைப்படமும் ஒன்று. விழாவில் இறுதி நாளில் பேசிய, தேர்வுக்குழு தலைவர் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த நடாவ் லேபிட், காஷ்மீர் பைல்ஸ் திரைப்படம் வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் தயாரிக்கப்பட்ட இழிவான திரைப்படம். கவுரவம் வாய்ந்த சர்வதேச திரைப்பட விழாவில், இத்தகைய படத்தை திரையிட்டது அதிர்ச்சியை தருகிறது என்றார். வெறுப்பை விதைக்கும் பிரசார தன்மை கொண்ட இப்படத்தை திரையிட்டது மன உளைச்சலைத் தருகிறது என்றும், இதற்காக வெளிப்படையாக அதிருப்தியைத் தெரிவிப்பதாகவும் மேடையிலேயே கூறினார். பாஜகவினரும் இந்துத்துவா அமைப்புகளும் கொண்டாடிய ஒரு படத்தை, பாஜக அமைச்சர்கள் முன்னிலையிலேயே சர்வதேச திரைப்பட விழாவின் தேர்வுக்குழு தலைவர் கடுமையாக விமர்சித்து பேசித் தீர்த்தார். அங்கு கூடியிருந்த எவராலும் நடாவ் லேபிட்டின் பேச்சிற்கு மறுப்பு கூட தெரிவிக்க இயலவில்லை.

# திவ்யா – மதன் வாழ்க்கை இணையேற்பு விழா

**தோ**ழர்கள் திவ்யா - மதன் வாழ்க்கை இணைப்பு விழா 20.11.2022, ஞாயிறு காலை 11.00 மணியளவில் திருப்பூர், திருமுருகன்பூண்டி,டே மூன் பார்டி ஹாலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

ஜாதி மறுப்பு சுயமரியாதை திருமணம் ஆக நடைபெற்ற இத்த திருமண விழாவின் முதல் நிகழ்வாக பகுத்தறிவு பாடல்களை யாழினி யாழ் இசை கோவை இசைமதி ஆகியோர் பாடினார்கள்.

ஆத்துப்பாளையம் பகுதி கழகத் தோழர் பரந்தாமன் வரவேற்புரை யாற்றினார்கள்.

அடுத்து கழகத் தலைவர் தலைமையில் இணையர்கள் இல்வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியேற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து மணமக்களை வாழ்த்தி மணமகனின் நண்பர் மற்றும் கழகத்தின் மாநில பொறுப்பாளர்களும் நிர்வாகிகளும் தோழர்களும் பேசினார்கள்.

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆ.சந்தோஷ், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கோவை மாவட்ட கழக தலைவர் மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன், தலைமை குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம்,திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் முகில் ராசு, மணமகனின் நண்பர் சியாமளா, உறவினர் மணிகண்ட பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சியை கழக மாநகரத் தலைவர் தனபால் தொகுத்து வழங்கினார். மாவட்டக் கழக அமைப்பாளர் சங்கீதா அவர்கள் நன்றியுரைடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

இத்திருமண நிகழ்வில் மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் மணமக்களின் நண்பர்கள் உறவினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பயப்படாதீங்க; பா.ஜ.க.வுக்கு ஆபத்தில்ல...!

- ஆளுநர் அவர்களே தமிழ்நாடு அரசு ஒப்புதல் கேட்பது ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்துக்கு தான், ஏதோ ஆபாச வீடியோ தடைச் சட்டம் என்று நினைத்து அதனால் தமிழக பாஜகவுக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படாதீர்கள்.
- ஆன்லைன் சூதாட்ட தடையை வைத்துக் கொண்டே சூதாட்டம் நடத்துகிறார் ஆளுநர் மசோதா காலாவதியாக கடைசி நாளில் விளக்கம் கேட்டு அனுப்புவது ‘சூப்பர்’ சூதாட்டம்.
- ஆளுநர்கள் ரப்பர் ஸ்டாம்பா என்று கேட்கிறார் ரவி நியாயம் தான் ஒன்றிய ஆட்சியின் ரப்பர் ஸ்டாம்ப் ஆக இருக்கவே கூடாது இப்போதாவது அவருக்கு புரிந்தது நல்லது

**– விடுதலை இராசேந்திரன்**
**டுவிட்டரிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 02nd December 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN